**jumpina மையம் Winterthur நகரத்தில் வாழும் இளம் பெண்களுக்காக அந்த நகரம் வழங்கும் ஆலோசனைத்திட்டம். இந்த சேவை இலவசமானது.**

## யார் jumpina மையத்திற்கு வருகின்றனர்?

- 13ற்கும் 18ற்கும் இடைப்பட்ட இளம் பெண்கள்
- பாடசாலையில் இருந்து தொழில் மற்றும் வயதுவந்தோர் வாழ்விற்கான காலகட்டத்தில் இருப்பவர்கள்.

## எதற்காக இளம் பெண்கள் jumpina மையத்திற்கு வருகின்றனர்?

- ஏனெனில் பாடசாலையில் அல்லது பொழுதுபோக்கு நேரங்களில் சவால்கள் ஏற்படுவதால்.
- ஏனெனில் தொழிற்கல்வி அல்லது வேறு பொருந்தக்கூடிய தொடர்வதற்கான தீர்வு கண்டுபிடிப்பதில் ஆதரவு தேவைப்படுவதால்
- ஏனெனில் தமது வயதுப்பிள்ளைகளுடனும் பெரியவர்களுடனும் முரண்பாடு இருப்பதால்
- ஏனெனில் தற்போதைய வாழ்க்கைக்கட்டத்தில் வரும் பிரச்சனைகளிலும் கஷ்டங்களிலும் அவர்களுக்கு ஒரு துணை தேவைப்படுவதால்.

## jumpina மையம் கீழ்க்காணும் நோக்கங்களை அடைய முனைகின்றது

- இளவயதினர் தொடர்ந்தும் பாடசாலையில் கலந்துகொண்டு பாடசாலை காலத்தை சரியாக நிறைவு செய்தல்
- இளவயதினர் ஓர் தொழிற்கல்வியை அல்லது வேறொரு பொருந்தக்கூடிய தொடர்வதற்கான தீர்வை கண்டுபிடித்தல்.

## jumpina மையம் கீழ்வருவனவற்றை வழங்க முடியும்

- சேர்ந்து தீர்வுகளை கண்டறிதல்
- தொழில் தேர்விலும் தொழிற்கல்வி தேடலிலும் ஆதரவளித்தல்
- வேறொரு பொருந்தக்கூடிய தொடர்வதற்கான தீர்வின் தேடலிற்கு ஆதரவளித்தல், உதாரணத்திற்கு தொழில்சார்பாக தயார்படுத்தும் வருடம்
- பிரச்சனைகளின் போது மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை வழங்குதல்
- கஷ்டமான சூழ்நிலைகளில் சமூகசேவகரின் துணை
- அன்றாட பாடசாலை வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள ஆதரவளித்தல்
- குறைந்தது மூன்று மாத நேரகாலத்தில் கிழமைக்கு ஓர் அல்லது இரண்டு சந்திப்புகளில் ஆலோசனைகள் நடைபெறும். ஒரு சந்திப்பு ஒரு மணிநேரம் நடைபெறும்.
- ஆலோசனை வழங்குவதோடு தரஅிையெ மையத்தில் புதன்கிழமைகளில் மதிய உணவும் வழங்கப்படுகிறது

## jumpina மையம் பின்வருவனவற்றை முக்கியமானதாக கருதுகின்றது

- ஒன்றிணைந்து செயல்பாட்டிற்கான அடிப்படையாக இளம் பெண்களுடன் நம்பிக்கையான தொடர்பை பேணுதல்.
- இளம் பெண்ணின் முழுமையான கருத்தை எடுத்துக்கொள்ளுதல். அதாவது நாங்கள் அந்த இளம் பெண்ணின் திறமைகளை மற்றும் குறிக்கோள்களை அடிப்படையாக வைத்து செயல்படுவோம்.
- பலதரப்பட்ட தொடர்பாளர்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுதல் (பாடசாலை, அரசாங்க நிர்வாகங்கள், நிறுவனங்கள் மற்றும் பல)
- மகள்களின் சிறப்பான வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகத் திகழும் பெற்றோருடன் நம்பிக்கையாக ஒன்றிணைந்து செயல்படுதல்
- விபரங்களை நம்பிக்கையாக பேணுதல்

## பதிவு செய்தல்

- இளம் பெண்கள் அல்லது பெற்றோர் எங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்
- இளம் பெண்கள் பாடசாலையினூடாக (ஆசிரியர்கள், பாடசாலை சமூகசேவையாளர்கள், பாடசாலை நிர்வாகத் தலைவர் மற்றும் பல) அல்லது வேறு அலுவலகங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களினூடாக எங்களுடன் தொடர்புகொள்ளப்படலாம், அதாவது எங்களிடம் பதியப்படலாம்.
- தொடர்புகொண்ட பின்னர் பிணைக்கப்படாத முதல் சந்திப்பு ஒப்புக்கொள்ளப்படும். அதன் பின்னர் இதில் உள்வாங்குதல் பற்றி இளவயதினரும் தரஅிையெ - குழுவினர்களும் தீர்மானிப்பர்.

## Kontakt

**Jumpina**
Beratungsangebot für Mädchen
Trollstrasse 18
8400 Winterthur

| | |
|---|---|
| Telefon: | 052 267 65 88 |
| E-Mail: | jumpina@win.ch |
| Homepage: | www.stadt.winterthur.ch/jumpina |
| Erreichbar: | Montag – Freitag |

Stadt Winterthur

jumpina

Beratungsangebot
für 13-18jährige
Mädchen zwischen
Schule, Beruf und
Freizeit